திரு. ப. நெடுமாறன்: தலைவரவர்களே, திருமணமே ஆகாத சட்டமன்ற உறுப்பினர் இதிலே அனுபவம் இல்லாமல் சில வார்த்தைகளைச் சொல்கிறார் என்று நினைக்கிறேன். அவர் விரைவிலே திருமணம் செய்து கொண்டு அனுபவம் பெற வேண்டும்.

திரு. நா. சுந்தரராஜ்: நன்றி. இந்த குடும்ப நலத் திட்டத்தைப் பொறுத்த வரையிலே இதிலே கொஞ்சம் கடுமையாக நடவடிக்கைகளை எடுத்தாக வேண்டும். சில நாடுகளிலே இரண்டு குழந்தைகளுக்கு மேல் மூன்றாவது குழந்தையைப் பெற முயற்சி செய்தால் அவர்களுக்கு பல சலுகைகள் கொடுப்பதில்லை. அதாவது மெட்டர்னிட்டி லீவ், இலவச மருத்துவ வசதி போன்ற பல வசதிகள் கொடுப்பதில்லை. அதுபோன்ற சட்டங்களை நாமும் நிறைவேற்ற வேண்டும். தயக்கம் காட்டாமல் அந்தமாதிரிச் சட்டங்களைக் கொண்டுவர வேண்டும். மேலும் மாண்புமிகு அமைச்சரவர்கள் மருத்துவத் துறையிலே பணியாற்றியவர்கள். மருத்துவராக இருப்பது வேறு, மருத்துவ நிர்வாகம் என்பது வேறு. ஆகவே இதையும் சிறப்புற நடத்திச் செல்ல வேண்டும். அதன் மூலமாக தமிழக மக்களுக்கு சுகாதாரக் கேடு ஏற்படாத வகையிலும், மருத்துவத்துறையிலே அதிகமான கவனம் ஏற்படுகின்ற வகையிலே உங்களுடைய பணி அமையவேண்டும் என்று சொல்லி விடை பெறுகிறேன்.

(6) அறிவிப்புகள்

(அ) மானியக்கோரிக்கைகள் மீதான விளக்கக் குறிப்புகள்

மாண்புமிகு பேரவைத் துணைத் தலைவர்: பேரவைக்கு ஓர் அறிவிப்பு. நாளை எடுத்துக் கொள்ளப்பட இருக்கும் தொழில் துறை மானியக் கோரிக்கை குறித்த விளக்கக் குறிப்புகள் இன்று பகல் 2 மணி வரை சட்டமன்றப் பேரவைத் துறையின் குறிப்பு மற்றும் ஆராய்ச்சிப் பிரிவில் வைக்கப் பட்டுள்ளன. விருப்பமுள்ள மாண்புமிகு உறுப்பினர்கள் அவற்றை அப்பிரிவில் இருந்து பிற்பகல் 2 மணிக்குள் பெற்றுக்கொள்ளலாம். பெற்றுக் கொள்ளாத மாண்புமிகு உறுப்பினர்களுக்கு, அவர்களது தங்கும் இடங்களுக்கு வழக்கம்போல மாலையில் அனுப்பி வைக்கப்படும்.

5. வரவு செலவுத் திட்டம் 1,980-81—வாக்கெடுப்பு (தொடர்ச்சி)

*டாக்டர் கே. சமரசம்: பேரவைத் துணைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு மக்கள் நல்வாழ்வுத்துறை அமைச்சரவர்களால் இன்றையதினம் கொண்டு வந்திருக்கக்கூடிய மருத்துவம், பொதுச் சுகாதாரம் ஆகிய மானியக் கோரிக்கைகளின் மீது நான் எனது உணர்வுகளை வெளிப்படுத்த விரும்புகிறேன்.